


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா, "வேர்கள், "விழுதுகள் மற்றும் "சிறகுகள் ஆகிய புதிய திட்டங்கள் தொடக்க விழாவில், 2,703 பயனாளிகளுக்கு, 33,67,18,120 ரூபாய்க்கான கடனுதவி காசோலைகளை வழங்கினார். இவ்விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா, "வேர்கள், "விழுதுகள் மற்றும் "சிறகுகள் ஆகிய புதிய திட்டங்கள் தொடக்க விழாவில், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் கொருக்குப்பேட்டை புதிய கிளை, திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் சிறு பல்பொருள் அங்காடிகள், புனரமைக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகம் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய நடைமேடை ஆகியவற்றை திறந்து வைத்தார். இவ்விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்கமும்-கூட்டுறவுத்துறையும்தான்

# தமிழர்களின் சுயமரியாதையைப் பாதுகாத்தன!

## சென்னையில் 71–வது கூட்டுறவு வார விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,நவ.19–

**சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் 'கூட்டுறவு வார விழா' நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு `வேர்கள்', `விழுதுகள்', `சிறகுகள்' எனும் மூன்று சிறப்பான திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.**

**அங்கு அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் - கூட்டுறவு சங்கம் - கூட்டுறவு இணையத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் தயாரிப்புகளைக் கொண்ட அரங்கினைப் பார்வையிட்டு, சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், `திராவிட இயக்கமும் கூட்டுறவுத் துறையும்தான் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மனிதனின் சுயமரியாதையைப் பாதுகாத்தன' என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு `வேர்கள்', `விழுதுகள்', `சிறகுகள்' எனும் இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்று, மூன்று சிறப்பான திட்டங்களைத் தொடங்கி வைப்பதிலும், 180 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 200 சகோதரிகள் உட்பட, 2 ஆயிரத்து 700 பேர்களுக்கு ரூ.33 கோடியே 70 அளவுக்குக் கூட்டுறவு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்குவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### 'வேர்கள்', 'விழுதுகள்'

இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவுத்துறை சார்பாக, துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பங்கேற்கின்ற முதல் நிகழ்ச்சியே ஒரு சிறப்பான நிகழ்ச்சியாக அமைத்துக் கொடுத்ததற்கு அண்ணன் பெரியகருப்பன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட தேவைகளுக்கும் உதவுகின்ற வகையில் `வேர்கள்', `விழுதுகள்' என்ற திட்டங்கள் இங்கு செயல்படுத்தப்படுகின்றன.

அதேபோல் திருநர்களுக்கு வழங்குகின்ற வகையில், `சிறகுகள்' என்ற திட்டமும் இந்த மேடையில் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழா அரங்கத்தில் மகளிர் இருக்கிறார்கள், மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்கள், வணிகர்கள் இருக்கிறார்கள், விவசாயிகள் இருக்கிறார்கள், திருநர்கள் என அனைத்துத் தரப்பினரும் இருக்கிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் தத்துவத்தின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கூட்டுறவுத்துறைக்கு மீண்டும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திராவிட இயக்கத் தலைவர்கள்

ஏழை, எளிய மக்களைக் கைத்தூக்கி விடுவதற்காக, நாட்டிலேயே முதல் கூட்டுறவுச் சங்கம் திருவள்ளூரிலும், அதைத் தொடர்ந்து 1904–ஆம் ஆண்டில் நம் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணித் தொகுதியில்தான் தொடங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களுக்கும், திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

தந்தை பெரியார் அவர்கள் 1911–ஆம் ஆண்டு, ஈரோடு கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருந்தார். அதேபோல் நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1960–ஆம் ஆண்டு சின்னகாஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராகச் செயல்பட்டார். அதேபோல் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் 1946–ஆம் ஆண்டு, திருவாரூர் கமலாம்பிகா நகரக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இணைந்தார். இப்படி நம் திராவிட இயக்கத் தலைவர்கள் எல்லோருமே கூட்டுறவுத் துறையோடு இணைந்து செயல்பட்டுள்ளார்கள் என்பதே மிகப்பெரிய பெருமை.

### திராவிட மாடல் அரசு

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான கழக ஆட்சியிலும், நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியிலும் கூட்டுறவே நாட்டு உயர்வு என்று கூட்டுறவுத் துறைக்கும், அந்தத் துறையின் வாயிலாக, தமிழ்நாட்டு மக்களுக்கும் ஏராளமான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, இன்று அவை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக, நம் திராவிட மாடல் அரசு அமைந்த இந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை வாயிலாகச் செய்த சாதனைகள் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

### ரூ.420 கோடி கடன் இணைப்புகள்

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக, 7 ஆயிரத்து 600 கோடி ரூபாய் கடன் தொகை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு வங்கிகள் வாயிலாக, கடந்த மூன்று ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகள், பெண் தொழில்முனைவோர்கள், கைம்பெண்கள் எனக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேருக்கு 420 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை இல்லாத அளவிற்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 39 ஆயிரம் கோடி அளவிற்கு வேளாண் பயிர்க் கடனை கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக நம் திராவிட மாடல் அரசு வழங்கி இருக்கிறது.

கடன் வழங்குவது மட்டுமல்ல, விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் நிலையை உணர்ந்து பல்வேறு தருணங்களில் அவர்களின் கூட்டுறவுக் கடன்கள், தள்ளுபடியும் செய்யப்பட்டு இருக்கின்றன.

இந்த மூன்று ஆண்டுகளில், 3 ஆயிரம் கோடி அளவிற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளின் கூட்டுறவு வங்கிக்கடனை நம் கழக அரசு தள்ளுபடி செய்துள்ளது. நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது முக்கியமான ஒரு தேர்தல் வாக்குறுதியை அளித்தார். கூட்டுறவு வங்கிகளில் 5 சவரன் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற வாக்குறுதியை அளித்தார். அந்த வாக்குறுதியின் அடிப்படையில் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குத் தங்க நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.




### 35 ஆயிரம் நியாய விலைக்கடைகள்

மக்களுடன் நேரடியாகத் தொடர்பில் இருப்பது எதுவென்றால், அது இந்தக்கூட்டுறவுத்துறைதான். தமிழ்நாட்டில் 2 கோடியே 30 லட்சம் குடும்பங்களுக்கு, பி.டி.எஸ் திட்டத்தின்கீழ், அத்தியாவசிய பொருட்களை நீங்கள் வழங்கி வருகிறீர்கள். கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகச் செயல்படுகின்ற 35 ஆயிரம் நியாய விலைக்கடைகள் என்ற மாபெரும் நெட்வொர்க்தான் இதற்கு முக்கியக் காரணம்.

கூட்டுறவுத்துறையின் இந்த நெட்வொர்க்தான் தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மிகப் பெரிய வெற்றி அடைவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. கொரோனா காலத்தில் ஊரடங்கு காலம். புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் நேரங்களில் அத்தியாவசிய பொருட்களை, நிதியுதவிகளை மக்களுடன் அரசாங்கத்தால் உடனுக்குடன் கொண்டு சேர்க்க முடிந்தது என்றால், அதற்கு முக்கியக் காரணம் இந்த மகத்தான நெட்வொர்க், கூட்டுறவுத்துறையின் நெட்வொர்க்தான்.

### பண்டிகை நேரங்கள்– பரிசுத்தொகைகள்

பொங்கல் போன்ற பண்டிகை நேரங்களில், அரசின் பரிசுத் தொகைகளை நியாய விலைக் கடைகளின் வாயிலாகத்தான் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம். இந்தப் பிரமாண்ட நெட்வொர்க்கை தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கி யதும், அதனை வலுவாக்கியதும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

ஒன்றிய அரசிடம் 1965–ஆம் ஆண்டு `ஃபுட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா' என்ற நிறுவனத்தைத் தொடங்கியது. இதன் வாயிலாக, இந்தியா முழுவதும் விவசாயிகளிடம் நெல், கோதுமை போன்ற பொருட்களைக் கொள்முதல் செய்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் கிடங்குகள் அமைத்தது. ஸ்டாக் செய்யப்பட்டுத் தேவையான நேரங்களில் அந்தந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசே வழங்கியது. ஒரு கட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்படக்கூடிய அரிசியின் அளவு குறைந்தது. மண்ணெண்ணெய் அளவும் குறைந்தது.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

அந்த நேரத்தில்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற நிறுவனத்தை 1972–ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அரிசி ஆலைகளும், கிடங்குகளும் அமைக்கப்பட்டன. விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நியாய விலைக்கடைகள் ஊருக்கு, ஊர் திறக்கப்பட்டன. அதன் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய திட்டங்களால் தமிழ்நாட்டில் பசியோடு யாருமே இல்லை என்ற வகையில், அனைவரின் உணவுக்கும் உத்தரவாதம் செய்யப்பட்டது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் பார்த்தால், கூட்டுறவுத்துறையும், திராவிட இயக்கமும்தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மனிதனின் சுயமரியாதையைப் பாதுகாத்தது என்று சொல்லலாம். இன்றைக்குக் கூட்டுறவுத் துறை முழுக்கக் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு அளவிற்கு நெட்வொர்க்கும், நவீனமயமாக்கப்பட்ட அமைப்பும் உள்ள கூட்டுறவுத்துறை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்று நாம் பெருமையாகக் கூறிக்கொள்ளலாம்.

> **“பொங்கல் போன்ற பண்டிகை நேரங்களில், அரசின் பரிசுத் தொகைகளை நியாய விலைக் கடைகளின் வாயிலாகத்தான் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம். இந்தப் பிரமாண்ட நெட்வொர்க்கை தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கியதும், அதனை வலுவாக்கியதும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.”**

கூட்டுறவு என்றாலே ஒற்றுமை என்று அர்த்தம். அந்த வகையில், பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் கூட்டுறவுத்துறை பங்களிப்புச் செய்து வருகிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்குக் கூட்டுறவுத்துறை நியாய விலைக் கடைகளின் வாயிலாகத்தான் உணவு தானிய பொருட்கள் அனுப்பப்படுகின்றன.

### மகளிர் உரிமைத்தொகை திட்டம்

நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின் வாயிலாக, இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்ற மகத்தான திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1 கோடியே 16 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெருகின்ற இந்தத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பு மிகமிக முக்கியமானது. ஏனென்றால், கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக 8 லட்சத்து 29 ஆயிரம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, மகளிர் உரிமைத்தொகையை ரெக்கரிங் டெப்பாசிட்டாகச் செலுத்தி அதன் மூலம் மகளிர் வட்டியைப் பெற்று, குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பெரிய அளவிலான தொகையாகப் பெறுவதற்காகத் `தமிழ் மகள்' என்ற திட்டத்தையும் நம் கூட்டுறவுத்துறைதான் செயல்படுத்தி வருகிறது.

### சிறு சேமிப்பு இயக்கம்

சிறு சேமிப்பை ஒரு இயக்கமாகவே நம் துறை மாற்றி இருக்கிறது. `கிராமப்புறங்களில் ஒரு கூட்டுறவு சொசைட்டி வந்து விட்டால், அது பத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கிளை வந்ததற்குச் சமம்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்குக் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக நம் கூட்டுறவுத்துறை உள்ளது.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினரின் மேன்மைக்காக உழைக்கின்ற கூட்டுறவுத்துறை, இன்னும் பல உயரங்களைத் தொட, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்றும் உங்களோடு துணை நிற்பார்கள். இந்தக் கூட்டுறவு வார விழா சிறக்கட்டும். இங்கு வங்கிக்கடன் இணைப்புகள் பெற்றுள்ள மற்றும் நலத்திட்டங்களைப் பெற்றுள்ள அத்தனை பேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பெரியகருப்பன், மா. சுப்பிரமணியன், சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், வெற்றியழகன், பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.இராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.சுப்பையன் ஐ.ஏ.எஸ். மற்றும் கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள், நலத்திட்ட உதவிகள் பெற வந்த பயனாளிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று

# இரா.ஜெயராமகிருஷ்ணன் இல்ல திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் பெருமக்கள் - கழக உடன்பிறப்புக்கள் பங்கேற்பு!

*திருப்பூர், நவ. 19 -*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன்இல்ல திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.*

*தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் நிகழும் பேரறிஞர் அண்ணா ஆண்டு 116 நவம்பர் மாதம் இன்று (19.11.2024 - செவ்வாய்க் கிழமை) மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவர், மடத்துக் குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராம கிருஷ்ணன் - ஜெ.கலைச் செல்வி ஆகியோரது மகள் டாக்டர் ஜெ.ஐஸ்வர்யா - சேலம் எம்.சித்தேஸ்வரன் சி.அம்பிகா ஆகியோரது மகன் டாக்டர் சி.சூர்யா திருமண வரவேற்பு விழா சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.*

---

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# கழக மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

### கழக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு!

*சென்னை, நவ. 19-*

*தி.மு.கழக மருத்துவ அணியின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம், கழக மருத்துவ அணி மாநில தலைவர் மரு.கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி. தலைமையில் காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றது. கழக மருத்துவ அணி மாநில செயலாளர் மரு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.*

*இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துவது, டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை மண்டல அளவில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறை கூட்டங்களை நடத்துவது, மண்டல அளவிலான நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள், மருத்துவ அணி உறுப்பினர் சேர்க்கை பணிகள், சமூக ஊடகங்களில் மருத்துவ அணி சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால மருத்துவ அணி வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.*

*மருத்துவ அணி துணைச் செயலாளர்கள் மரு ஜெ. அருண், மரு இராஜேஸ்வரி மோகன்காந்தி, மரு.அஞ்சுகம் பூபதி, எஸ்.ஏ.இரமேஷ், மரு திலீப்குமார் உள்ளிட்டோர் பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர்.*

*மருத்துவ அணி துணைத் தலைவர்கள் மரு செந்தில் நாதன், மரு எ.வ.வே.கம்பன், இணைச் செயலாளர்கள் மரு இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மரு ஆர்.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு ஆர்.டி.அரசு, மரு ஆர். அண்ணாமலை, மரு கலை கதிரவன், திருமதி திலகவதி ஜெயராஜ், இராஜேஷ் பாபு, மன்சூர் அலிகான், செண்பக விநாயகம் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகி கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.*